**MINUTES OF THE PUBLIC HEARING MEETING OF M/S. SRI BLUE METALS ROUGH STONE AND GRAVEL QUARRY, S.F. NO. 76/1A & 76/1B (P), CHIKKARAMPALAYAM VILLAGE, METTUPALAYAM TALUK, COIMBATORE DISTRICT IN AN AREA OF 5.07.22 HECTARE HELD ON 21.08.2024 AT 11.00 A.M. IN DURAI'S MAHAL, KANNARPALAYAM ROAD, CHIKKARAMPALAYAM VILLAGE, KARAMADAI, COIMBATORE DISTRICT**

| | | |
|---|---|---|
| **NAME OF THE PROJECT** | - | M/s. Sri Blue Metals Rough Stone and Gravel Quarry,<br>S.F. No. 76/1A & 76/1B (P),<br>Chikkarampalayam Village,<br>Mettupalayam Taluk,<br>Coimbatore District |
| **VENUE** | - | Durai's Mahal, Kannarpalayam Road,<br>Chikkarampalayam Village, Karamadai,<br>Coimbatore District |
| **DATE & TIME** | - | 21.08.2024 – 11.00 A.M. |

**Present:**

| | | |
|---|---|---|
| 1. | Tmt. S. Rajeswari | District Revenue Officer,Stamps,<br>Coimbatore District. |
| 2. | Dr. R. Chandrasekaran | District Environmental Engineer (FAC),<br>Tamil Nadu Pollution Control Board,<br>Coimbatore North |
| 3. | Er.I. Abubakkar | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Coimbatore North |
| 4. | Er. K. Kalaivendhan | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Coimbatore North |
| 5. | Thiru. D. Rajasekaran | Inspector,<br>Karamadai Police Station,<br>Mettupalayam Taluk,<br>Coimbatore District |

| | | |
|---|---|---|
| 6. | Thiru. Gnanasekaran | The Project Proponent |
| 7. | Thiru. J. Malarmani | Village Administrative Officer,<br>Sikkarampalayam, Coimbatore |
| 8. | Thiru. Sheik Nawas | EIA Consultant,<br>Geo Exploration and Mining Solution,<br>Salem District. |
| 9. | Public | 213 Nos. (Enclosed in Annexure - II) |

The public hearing meeting had started with Tamil Thai Vazhthu.

**District Environmental Engineer, TNPCB, CBN:-**

- The District Environmental Engineer has welcomed one and all present here. Public hearing meeting is proposed for the rough stone and gravel quarry project by M/s. Sri Blue Metals.
- The Union Ministry of Environment's circular states that public hearings are required for certain industries or projects. Accordingly, a public hearing meeting is being held today in Sikkarampalayam village, Mettupalayam taluk, regarding the establishment of the proposed rough stone and gravel quarry project.
- I request the District Revenue Officer to preside over this public hearing meeting.
- I am proud to extend a warm welcome to the Public of Bilichi Village, Social Welfare Activists & Environmentalists who have gathered here for the public hearing meeting of M/s. Sri Blue Metals Rough Stone and Gravel Quarry Project on behalf of the Tamil Nadu Pollution Control Board.
- Press release regarding public hearing meeting was published on 17.07.2024 in "Dinathanthi" and "The Time of India" newspapers. Pamphlets regarding the venue of the public hearing meeting were also distributed to the public.
- First, the project consultant will provide information regarding the project. Following that, the public will express new opinion on the project.
- These comments will be recorded and sent in video and audio form to the State Environmental Impact Assessment Authority.
- Now, the project consultant will explain the project in brief.

**Thiru. Sheik, EIA Consultant of M/s. Geo Exploration and Mining Solution, Salem**

Thiru. Sheik, the EIA Consultant of M/s. Geo Exploration and Mining Solution, elaborated the environmental impacts of the project, the measures to avoid them, the fund allocated for it and the benefits to be derived from the project.

The District Environmental Engineer invited the public to express their views and suggestions on the project.

**1. Mr. Kalamani, Former Panchayat Union Member, Senniveerampalayam**

I respectfully request you to grant permission to M/s. Sree Blue Metals for the proposed quarry. Approval of this project will not only enhance the financial position of our panchayat but also support to implement the development works within the panchayat. I kindly urge you to definitely give permission.

**2. Mr. Rajendran, Senniveerampalayam**

The quarry is essential for our panchayat as it provides significant employment opportunities, thereby improving the livelihood of many workers. It also supports various community initiatives, such as providing uniforms for school children. Many laborers are currently employed at the quarry, and its continued operation is crucial for our panchayat economy. Therefore, I humbly request that this quarry is important to our panchayat and grant the required permissions.

**3. Mr. Mahadevan, Sikkarampalayam:**

I want to share that the quarry owner has been doing an excellent job in our panchayat. The presence of quarries in the area has also significantly reduced the cost of gravel, and rent of vehicles which benefits everyone.

**4. Mr. Ramasamy, Former Deputy Chairman of the Panchayat Council, Senniveerampalayam.**

Having served as a deputy chairman of panchayat council for the past five years, I can attest the significant benefits of having a quarry in our panchayat. Many people rely on it for their livelihood, and it supports their families and education. The quarry has been a crucial resource for our community, and its continued operation is essential. The presence of the quarry has not caused any disturbances, and it is widely supported by the people of our panchayat, including myself.

5. **Mr. Jagannathan, Kannarpalayam.**

The quarry has been operating in Sikkarampalayam Panchayat for nearly 60 years, with no adverse impact on the surrounding villages/ panchayats. M/s. Sri Blue Metal has been working in good condition. Therefore, I kindly request that you grant them the necessary permission to continue their operations.

**6. Mrs. Paappathi, Kannarpalayam**

Good Morning to all. With the quarry here, we have no problem. 200 people are working. We didn't have any problem.

**7. Mrs. Bakgyam, Chinnakaralur**

Hello everyone. I am a resident of this panchayat for 50 years, and I can confirm that the operation of the quarry has not harmed the public or the farmers. The minerals extracted and the revenue generated from his quarry plays a crucial role in our panchayat, enabling us to build essential infrastructure such as tar roads and drainage systems. The revenue from this also supports our schools. Therefore, I humbly request that license may be granted for this quarry. Thank you.

**8. Thiru. Gandhi, Kannarpalayam**

The presence of stone quarry in this panchayat, provides convenience for everyone. They have provided tar roads which is convenient to travel to school. Panchayat gets more income from it. There is no harm. The project proponent is providing uniforms to the children. So, we welcome the establishment of stone quarry. So, I kindly request you to grant the license.

**9. Thiru. Prakash, Kannnarpalayam**

The presence of M/s. Sri Blue Metal in this panchayat is very beneficial. It provides a wide range of employment cpportunities for local residents. Considering these advantages, I kindly request that you grant permission for the establishment of this quarry.

**10. Thiru. Sangili, Kannarpalayam**

Good Morning to all. M/s. Sri Blue Metals is doing an excellent job in this panchayat. In addition to their impressive work, they offer employment opportunities to both educated graduates and uneducated local residents, which is advantageous for everyone. Therefore, I kindly request that you grant permission to M/s. Sri Blue Metals.

**11. Mrs. Madhu, Kannarpalayam**

I humbly request you to grant permission for this stone quarry.

**12. Mr. Arun, Kannarpalayam**

I'm Mr. Arun from Kannarpalayam. I have been here for 20 years, and quarries have been a part of this panchayat even before my birth. They contribute significantly to local schools, enhance livelihoods, and provide numerous job opportunities, including drivers. As a result, hundreds of families are able to thrive. Therefore, I kindly request that you grant permission for this quarry.

**13. Tmt. Revathy, Sikkarampalayam**

I'm a fourth ward member from Sikkarampalayam. I strongly support to grant a license to Sri Blue Metals for their quarry operations. They have been making significant contributions to our community, including providing school uniforms annually and shoes to downtrodden children. Additionally, they support pregnant women with nutritious food every month. Considering these positive impacts, I humbly request that you grant them the necessary quarrying license. Thank you.

**14. Thiru. Daniel, Kannarpalayam**

Hello everyone, I am a chemistry graduate and have lived in this area for 35 years. The quarry has provided numerous benefits not only to our Sikkarampalayam Panchayat but also to the surrounding panchayats. It has positive impact on education, sports, and the environment and, raising standards across the panchayat. The quarry has planted over ten thousand of saplings, aiming to make our panchayat a model panchayat in Tamil Nadu. Additionally, during the challenging period of the COVID-19 pandemic, the quarry owners organized the distribution of more than 8,000 vaccines to our panchayat residents. Given their ongoing support and

contributions to our community, we have no objections to the continued operation of this quarry. Thank you.

**15. Thiru. Shanmugam, Social Activist:**

Quarry has been an integral part of Sikkarampalayam Panchayat for many years, with a significant portion of the panchayat's funds coming from this stone quarry. The financial support from the quarry has greatly contributed to essential infrastructure projects such as drainage systems, road construction, and various welfare schemes. Thousands of people depend on this quarry for their livelihoods.

M/s.Sri Blue Metals has been actively supporting our community for 21 years by providing uniforms, shoes, and incentives to government school students in our panchayat. They also extend their support to students in nearby areas like Velliyankadu, Tholampalayam, Nellithurai, and Kemmarampalayam.

Additionally, they offer a □2,000 incentive to students who complete their 10th standard and pursue higher education, along with the provision of clothes every year. Furthermore, in response to the poor condition of houses in Sikkarampalayam, Karupparayan Nagar, and Vadavalli, the quarry owner has personally repaired and painted over a hundred houses.

The cost about □50,000 each. They also provide one free unit of M-sand and gravel to builders under the government housing scheme, regardless of the recipient's background. Considering the extensive support and positive impact of this quarry, I humbly request that you grant permission for its continued operation. Thank you.

**16. Thiru. K. Murugesan, Sikkarampalayam**

Hello everyone. I am a resident of Sikkarampalayam village and I am 66 years old. Quarries have been functioning in our village for over 50 years. This quarry is nature's gift to the Sikkarampalayam village, similar to how Kolar gold mining has benefited its region. The mineral wealth extracted here is crucial for our panchayat's development projects and provides valuable employment opportunities for the local women population. Therefore, I kindly request your support in granting permission for the continued operation of our quarries. Thank you.

**17. Thiru. L. Murugaiyan, Vadavalli**

Hello everyone. Sikkarampalayam Panchayat is recognized as one of the most developed villages in our Karamadai Union, with excellent infrastructure such as roads and schools, which is a testament to the hard work of the Panchayat Council Chairman. However, there are some pressing issues that need attention.

In contrast, the Onnipalayam division has substantial development, with land prices reaching several crores per acre and individual cents selling for five lakhs. I reside in Vadavalli, where the road from Vadavalli Perumal Temple to Kumaran Hill is in poor condition due to the transport of stone from Sikkarampalayam village. This road is severely dilapidated, affecting daily commutes.

Additionally, the panchayat has laid water pipes to serve around ten houses, but these pipes are now completely damaged, preventing water flow. This issue, along with a dangerous ground level bridge where accidents frequently occur during the rainy season, remains unaddressed.

There is a nearby direct route from Vadavalli to Karamadai through Karupparayan Temple that is underutilized. The Sikkarampalayam Magaliyamman Temple lacks proper transport facilities, and land prices near the quarry are low, at around 50 lakhs per acre.

Given these challenges and the disparity in development within the same village, it might be beneficial to consider relocating quarry operations to another village. This change could lead to improvements in other areas and better serve the broader community.

Therefore, I suggest to drop quarrying at this village and explore alternative business for the betterment of public.

**18. Thiru. Karthick, Vadavalli:**

My name is Karthik. I had completed my twelfth standard and didn't know what to do. The project proponent made me study in college. I could gain up to 5 degrees. Now I am working as a professor in college. I would like to express my gratitude to the Chairman for this.

The livelihood of nearly 50 families is improved through the income from this quarry. Not only that, they have been providing free sports uniforms to 25 government school girls under Karamadai Panchayat Union for 21 years to improve their education. Not only the schools but also the college students are given incentives every year to improve the quality of their education. Thus, many students get the chance to study in college.

Apart from the students, in all the areas under our Panchayat, they are doing everything like drinking water facility, streets, tarred roads, drainage board etc. Thank you.

**19. Thiru. Rangaraj, Kannarpalayam:**

Stone Quarry has been located here since I can remember. Stone quarry is playing a crucial role in the development work of our panchayat and for the general public. Therefore, there is no objection to the setting up of the stone quarry here. Mainly they are benefiting public of Sikkarampalayam panchayat and everyone. So, I humbly request you to grant license to this stone quarry.

**20. Thiru. Janarthanan, Sikkarampalayam, 6th Ward Councillor:**

I extent my greetings to all elders and mothers. I am a construction worker, and as part of my job, I rely on gravel, Sand, M-Sand, and P-Sand. If quarry operations are halted here, it would create significant challenges for us. Nearly 10,000 construction worker families depend on this quarry for their livelihood. Without it, finding these essential materials would become difficult and costly.

The quarry's proximity helps keep prices reasonable and provides a crucial resource for our community. If the quarries are to be closed, we would face difficulties accessing these materials and maintaining affordable costs. We can't go to farther village like Kallipatti to get material.

Therefore, I humbly request that the quarry in Sikkarampalayam remains operational to continue supporting the many families who rely on it. Thank you.

**21. Thiru. Saravanakumar, Periyavadavalli:**

Before M/s. Sri Blue Metals came in, the government had given permission to many quarries. In that, many irregularities have been committed. The quarries are not definitely mining the minerals at the same depth as per the conditions and permissions given by the government. They have not definitely built green belt around the premises as committed and not have barbed wire fences as assured.

As a result, the livelihood of Sikkarampalayam Panchayat has been greatly affected. Not only that, the livelihood of the farmers and the ground water level have been greatly affected. Tell me now, to what depth they extracted minerals from the quarry. How much mineral resources have been looted? After examining that, necessary penalty should be imposed on them after considering whether they have caused loss of revenue. Action should also be taken against the officials who supported it. Apart from that, I would like to state that henceforth permission should not be given to any stone quarries in Sikkarampalayam Panchayat.

**District Environmental Engineer:**

Thank you everyone. Thank you all for your participation. Petitions submitted by the public will be forwarded to the State Level Environment Impact Assessment Authority along with the meeting proceedings.

On behalf of the District Administration and the Pollution Control Board, I would like to extend our gratitude to the environmentalists and the general public for sharing their views during this public consultation. We also appreciate the support of the District Revenue Officer in convening this meeting, as well as the assistance of the police department, all participating officers, journalists, and Pollution Control Board officials.

Thank you once again.

**Annexure:-**

No. of Petitions – 45 Nos.

**District Environmental Engineer(FAC),**
**Tamilnadu Pollution Control Board,**
**Coimbatore North**

**District Revenue Officer/**
**Stamps,**
**Coimbatore District**

21.08.2024 அன்று காலை 11.00 மணி அளவில், கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், சிக்காரம்பாளையம் கிராமத்தில் அமைந்துள்ள துரைஸ் மஹாலில் கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், சிக்காரம்பாளையம் கிராமம், க.ச.எண். 76/1A & 76/1B (P)– ல் 5.07.22 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள தி/ள். ஸ்ரீ புளூ மெட்டல்ஸ் சாதாரண கல் மற்றும் கிராவல் சுரங்க திட்டத்திற்கான பொது மக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கை விபரங்கள்:–

திட்டத்தின் பெயர் : தி/ள். ஸ்ரீ புளூ மெட்டல்ஸ் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி,
க.ச.எண். 76/1A & 76/1B (P),
சிக்காரம்பாளையம் கிராமம்,
மேட்டுப்பாளையம் வட்டம்,
கோயம்புத்தூர் மாவட்டம்

நிகழ்விடம்: : துரை'ஸ் மஹால்,
கன்னார்பாளையம் ரோடு,
சிக்காரம்பாளையம் கிராமம்,
காரமடை,
கோவை மாவட்டம்.

நாள் &நேரம் : 21.08.2024 – காலை 11.00 மணி

பங்கேற்றோர் :

| | | |
|---|---|---|
| 1 | திருமதி. S. ராஜேஸ்வரி, | மாவட்ட வருவாய் அலுவலர் (கூ/பொ),<br>முத்திரைகள்,<br>கோயம்புத்தூர் மாவட்டம். |
| 2 | முனைவர்.திரு. இரா. சந்திரசேகரன் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (மு.கூ/பொ),<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>கோயம்புத்தூர் வடக்கு. |
| 3 | திரு. I. அபுபக்கர், | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோவை வடக்கு அலுவலகம் |
| 4 | திரு. K. கலைவேந்தன் | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோவை வடக்கு அலுவலகம் |
| 5 | திரு.D. ராஜசேகரன், | கண்காணிப்பாளர்,<br>காரமடை காவல் நிலையம்,<br>கோயம்புத்தூர் மாவட்டம். |
| 6 | திரு. ஞானசேகரன் | திட்ட உரிமையாளர் |
| 7 | திரு. J. மலர்மணி | கிராம நிர்வாக அலுவலர்,<br>சிக்காரம்பாளையம். |

| | | |
|---|---|---|
| 8 | திரு.ஷேக் நவாஸ் | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர், ஜியோ எக்ஸ்ப்லொரேஷன் & மைனிங் சொல்யூஷன்ஸ், சேலம் மாவட்டம். |
| 9 | பொது மக்கள் | 213 (இணைப்பு II-ல் உள்ளபடி) |

கருத்து கேட்பு கூட்டம் தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கியது.

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:-</u>

- அனைவருக்கும் வணக்கம். தி/ள். ஸ்ரீ புளூ மெட்டல்ஸ் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்திற்காக பொதுமக்களுடைய கருத்து கேட்பு கூட்டம் நடக்க உள்ளது.
- மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தினுடைய சுற்றறிக்கையின் படி குறிப்பிட்ட தொழிற்சாலைகள் அல்லது திட்டங்களுக்கு, பொது மக்களுடைய கருத்து கேட்புக் கூட்டம் இன்றியமையாது என்று சொல்லப்பட்டுள்ளது.
- அதன்படி, இந்த சாதாரண கல் குவாரி திட்டத்திற்கு, பொது மக்களிடையே கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளதால், ஸ்ரீ புளூ மெட்டல்ஸ் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி அமைவதற்கு, பொது மக்களுடைய கருத்துக் கேட்புக் கூட்டம் சிக்காரம்பாளையம் கிராமம், மேட்டுப்பாளையம் தாலுக்காவில் இன்று நடைபெறுகிறது.
- இந்த பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தை தலைமை தாங்கி நடத்தித் தருமாறு மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.
- இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு, அவர்களுடைய கருத்துக்களை பதிவு செய்ய உள்ள பொதுமக்கள் மற்றும் விவசாய பெருமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் அனைவரையும் வருக வருக என்று வரவேற்கிறேன்.
- இந்த கருத்து கேட்புக் கூட்டம் நடக்கவுள்ளது சம்மந்தமாக 17.07.2024 அன்று 'தி டைம்ஸ் ஆப் இந்தியா' மற்றும் 'தினத்தந்தி' ஆகிய நாளிதழ்களில் விளம்பரம் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், பொது மக்களை சந்தித்து அவர்களுக்கு துண்டு பிரசுரம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- முதலில் திட்ட அலுவலர் அவர்கள், இந்த திட்டத்தை பற்றி உங்களுக்கு எடுத்துக் கூறுவார்கள். அதன் பின் பொதுமக்கள் அவர்களுடைய கருத்துக்களை பதிவு செய்யலாம்.
- இந்த கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு வீடியோ மற்றும் ஆடியோ வடிவிலும் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும்.
- எனவே, பொதுமக்கள் அனைவரும் அவர்களுடைய கருத்துக்களை பதிவு செய்யலாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.
- முதலில் திட்ட ஆலோசகர் அவர்கள் இந்த திட்டத்தை பற்றி சுருக்கமாக விளக்குவார்கள்.

**திரு.ஷேக், சுற்றுச்சூழல் ஆலோசகர், ஜியோ எக்ஸ்புளோரேசன் அண்டு மைனிங் சொல்யூஷன்ஸ், சேலம்**

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டறிக்கை பற்றி திரு.ஷேக், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர், ஜியோ எக்ஸ்ப்லொரேஷன் & மைனிங் சொல்யூஷன்ஸ், சேலம் மாவட்டம் அவர்கள் நிழல்படம் மூலம், செயலாக்கப்படவுள்ள இத்திட்டத்தின் சுற்றுச் சூழல் தாக்கங்கள், அவற்றைத் தவிர்க்க தேவையான நடவடிக்கைகள், அதற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை மற்றும் இத்திட்டத்தின் மூலம் பெறப்படவுள்ள நன்மைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

இதன் பின்னர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், பொதுமக்களை இத்திட்டம் குறித்த கருத்துக்களை தெரிவிக்குமாறு அழைப்பு விடுத்தார்.

## <u>பொதுமக்களின் கருத்துகள்:-</u>

1. **<u>திரு. காலாமணி, முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர், சென்னிவீரம்பாளையம்</u>**

தி/ள். ஸ்ரீ புளூ மெட்டல்ஸ் நிறுவனத்திற்கு அனுமதி அளிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இத்திட்டத்திற்கு, அனுமதி அளிப்பதன் மூலம் நமது பஞ்சாயத்தின் நிதிநிலைமையும் உயர்கிறது. வளர்ச்சிப் பணிகள்

செய்ய ஏதுவாக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். கண்டிப்பாக அனுமதி அளிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

2. **திரு. ராஜேந்திரன், சென்னிவீரம்பாளையம்**

நமது பஞ்சாயத்திற்கு இந்த கல்குவாரி மிக அவசியமாக இருக்கிறது. இதனால் ஏகப்பட்ட தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கிறது. வாழ்வாதாரம் உயர்கிறது. தொழிலாளர்களுக்கு நிறைய வேலை கிடைக்கிறது. நமது பஞ்சாயத்தில் உள்ள பள்ளி குழந்தைகளுக்கு, சீருடை கிடைக்கின்றது. கல்குவாரியில் ஏகப்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அதனால், இந்த கல்குவாரி இந்த பஞ்சாயத்திற்கு மிக அவசியம் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

3. **திரு. மகாதேவன், சிக்காரம் பாளையம்**

அனைவருக்கும் வணக்கம். இந்த பஞ்சாயத்தில் குவாரி உரிமையாளர் மிகவும் நன்மை செய்து கொண்டிருக்கிறார். மேலும், இப்பகுதியில் கல்குவாரி இருப்பதனால், ஜல்லியின் விலை மிகக் குறைவாக கிடைக்கிறது. வாடகையும் குறைவாக உள்ளது. இதனால் அனைவருக்கும் பயன் தான்.

4. **திரு. ராமசாமி, முன்னாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர், சென்னிவீரம்பாளையம்**

முன்னாள் ஊராட்சி மன்றத்தின் துணைத் தலைவராக கடந்த ஐந்தாண்டு காலமாக பணியாற்றியிருக்கிறேன். இந்த ஊராட்சியில் கல்குவாரி இருக்கும் பட்சத்தில் எங்கள் அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கிறது. இதை நம்பி தான் ஆயிரம் பேர் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இதை நம்பி தான் எங்கள் குழந்தைகளை படிக்க வைக்கின்றோம். இதைத்தவிர, வேறு எதுவும் இல்லை. முக்கியமாக எங்களுக்கு கல்குவாரி வேண்டும். கல்குவாரியினால் எந்த இடையூறும் யாருக்கும் இல்லை. ஆதனால், மீண்டும் மீண்டும் கல்குவாரி தொடர வேண்டும். இதுதான் எங்கள் ஊர் மக்களுடைய கருத்து மற்றும் என்னுடைய கருத்து. நன்றி வணக்கம்.

## 5. திரு. ஜெகநாதன், கன்னார்பாளையம்

அனைவருக்கும் வணக்கம். சிக்காரம்பாளையம் பஞ்சாயத்தில் கிட்டத்தட்ட 60 ஆண்டுகளாக கல்குவாரி நடைபெற்று வருகிறது. இதனால், எந்த ஊருக்கும் எந்த பஞ்சாயத்துக்கும் எந்த பாதிப்பும் இல்லை. ஆகவே, இங்கு நல்ல முறையிலே ஸ்ரீ புளூ மெட்டல் நிர்வாகம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு அனுமதி வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

## 6. திருமதி. பாப்பாத்தி, கன்னார்பாளையம்

அனைவருக்கும் வணக்கம். இங்கு கல்குவாரி இருப்பதனால், எங்களுக்கு பிரச்சனையே இல்லை. 200 பேர் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். எங்களுக்கு எந்த ஒரு பிரச்சினையும் இல்லை.

## 7. திருமதி. பாக்கியம்

அனைவருக்கும் வணக்கம். நான் இந்த ஊராட்சியில் 50 வருட காலமாக வசித்து கொண்டு இருக்கிறேன். கல்குவாரி இயங்குவதனால் பொதுமக்களுக்கும் விவசாயிகளுக்கும் எந்த ஒரு பாதிப்பும் இல்லை. இதிலிருந்து கிடைக்கக்கூடிய கனிமம் மற்றும் அதனால் கிடைக்கக்கூடிய வருவாய், உள்ளாட்சிக்கு அடிப்படை வசதிகள், தார் சாலை மற்றும் வடிகால் போன்றவற்றை அமைக்க ஏதுவாக உள்ளது. இதனால் பஞ்சாயத்திற்கு வருமானம் கிடைக்கிறது. இதிலிருந்து கிடைக்கக்கூடிய வருவாயை பள்ளிகளுக்கு செலவு செய்கிறார்கள். அதனால் இந்த கல்குவாரிக்கு உரிமம் வழங்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

## 8. திரு. காந்தி, கன்னார்பாளையம்

இந்த பஞ்சாயத்தில் கல்குவாரி இருப்பதனால் அனைவருக்கும் மிக வசதியாக இருக்கின்றது. குழந்தைகளை படிக்க வைப்பதற்கு வசதியாக இருக்கின்றது தார்சாலை அமைத்து கொடுத்திருக்கிறார்கள். பஞ்சாயத்திற்கு வருமானம் கிடைக்கிறது. உடைகள் கொடுக்கிறார்கள் எந்த ஒரு பாதிப்பும் இல்லை. ஆக

மொத்தம் கல்குவாரி வேண்டும். எனவே, உரிமம் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

9. **திரு. பிரகாஷ், கன்னார்பாளையம்**

தி/ள். ஸ்ரீ புளூ மெட்டல் அமைவதனால், இந்த பஞ்சாயத்திற்கு மிகுந்த நன்மை அளிக்கின்றது. இதனால், இங்கு வாழும் மக்களுக்கு பல்வேறு வகையான வேலை வாய்ப்புகள் கிடைக்கும். எனவே, இக்கல்குவாரி அமைவதற்கு நீங்கள் அனுமதி அளிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**10.திரு சங்கிலி, கன்னார்பாளையம்**

அனைவருக்கும் வணக்கம். ஸ்ரீ புளூ மெட்டல்ஸ் பல சிறப்பான பணிகளை இந்த பஞ்சாயத்தில் செய்து கொண்டிருக்கின்றனர். அதுமட்டுமின்றி, படித்த பட்டாதாரிகளுக்கும், பாமர மக்களுக்கும், அவரது தொழிற்சாலையில் பணிகள் புரிந்து வருகிறார்கள். அதன் மூலம் அனைவருக்கும் நன்மை ஏற்படுகிறது. இதனால் ஸ்ரீ புளூ மெட்டல்ஸ் நிறுவனத்திற்கு அனுமதி அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**11. திருமதி. மது, கன்னார்பாளையம்**

இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்குமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

12. **திரு. அருண், கன்னார்பாளையம்**

இங்கே நான் 20 வருடமாக இருக்கிறேன். நான் பிறந்ததற்கு முன்பே இங்கே கல்குவாரிகள் உள்ளன. இக்கல்குவாரி இருப்பதனால் அனைத்து குழந்தைகளுக்கும் இவர்கள் நல்லது செய்கின்றனர். வாழ்வாதாரங்கள் அதிகரிக்கின்றன. அதுபோக ஓட்டுநர்களுக்கும், நிறைய வேலை வாய்ப்புகள் கிடைக்கின்றன. அதனால், ஒரு நூறு குடும்பங்கள் நன்றாக வாழ்கின்றன. அதனால் இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

## 13. திருமதி. ரேவதி, சிக்காரம்பாளையம்

அனைவருக்கும் வணக்கம். நான் சிக்காரம்பாளையம், நான்காவது வார்டு உறுப்பினர். இந்த ஸ்ரீ புளூ மெட்டல்ஸ் கல்குவாரிக்கு உரிமம் கொடுக்க வேண்டும். அவர்கள் அனைவருக்கும் நல்ல உதவிகள் செய்து வருகிறார்கள். பள்ளிகளுக்கு ஒவ்வொரு வருடமும் சீருடைகள் வழங்கி கொண்டிருக்கிறார்கள். ஏழ்மையில் இருக்கும் குழந்தைகள் காலணி வாங்க மாட்டார்கள். ஆனால், இவர்கள் பள்ளி மாணவர்களுக்கு காலணி வாங்கி கொடுத்து, ஒரு தனியார் பள்ளிகளுக்கு இணையாக வழிநடத்தி கொண்டு செல்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், கர்ப்பிணி பெண்களுக்கு மாதாமாதம் ஊட்டச்சத்து நிறைந்த உணவுகள் கொடுத்து வருகிறார்கள். அதனால், இவர்களுக்கு கல்குவாரி உரிமம் தர வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

## 14. திரு. டேனியல், கன்னார்பாளையம்

நான் ஒரு வேதியியல் துறை பட்டதாரி. இந்த பகுதியிலே 35 வருடங்களாக குடியிருந்து வருகிறோம். இந்த கல்குவாரி நமது சிக்காரம்பாளையம் பஞ்சாயத்தில் மட்டுமல்ல, அருகில் உள்ள பல மக்களுக்கு பல்வேறு நன்மைகளை செய்து கொண்டு வருகின்றது. பள்ளி, கல்வி, விளையாட்டு அது மட்டும் அல்லாமல் சுற்றுச்சூழல் என அனைத்திலும் தரத்தினை உயர்த்தியுள்ளது.

நமது பஞ்சாயத்தில் உள்ள எல்லா பகுதிகளிலும், பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நட்டு, இந்த பஞ்சாயத்து தமிழ்நாட்டிலே ஒரு முன்னோடி பஞ்சாயத்தாக உருவெடுக்க இந்த கல்குவாரிகள் ஒரு முன்னெடுப்பை நடத்தியுள்ளனர். அது மட்டும் அல்லாது இக்கட்டான சூழ்நிலையிலும், அதாவது கொரோனா காலகட்டத்திலும், இந்த கல்குவாரி உரிமையாளர்கள், சங்கத்தின் மூலமாக சுமார் 8000-கும் மேற்பட்ட கொரோனா தடுப்பூசியினை நமது பகுதி அனைத்து மக்களுக்கும் கிடைக்கும் வகையிலே வழிவகை செய்தனர். இப்படியாக, ஒவ்வொரு நேரத்திலும் நமது பஞ்சாயத்திற்கு எல்லா வகையிலும் உதவிகளை செய்து கொடுத்துள்ளனர். அதனால், இந்த கல்குவாரி அமைப்பதில் எந்த ஒரு ஆட்சேபனையும் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

15. **திரு. சண்முகம், சமூக ஆர்வலர்**

இந்த சிக்காரம்பாளையம் ஊராட்சியில், காலங்காலமாக கல்குவாரி நடந்து கொண்டிருக்கின்றது. இந்த பஞ்சாயத்திற்கு அதிகமான நிதி இந்த கல்குவாரியினால் தான் வருகின்றது. இந்த கல்குவாரியின் நிதியுதவி மூலம், வடிகால் அமைத்தல், சாலைகள் அமைத்தல், பல மக்களுக்கு நலத்திட்டங்கள் செய்வதற்கு பெரும் உதவியாக உள்ளது. அதுமட்டும் அல்லாமல், ஆயிரக்கணக்கான மக்கள் இந்த தொழிலை மட்டுமே நம்பி இருக்கிறார்கள்.

நமது பஞ்சாயத்தில் படிக்கின்ற அரசு மாணவர்களுக்கு 21 வருட காலமாக, ஸ்ரீ புளூ மெட்டல்ஸ் நிறுவனம் சீருடைகள், காலணிகள் மற்றும் ஊக்கத்தொகைகள் வழங்கி வருகின்றனர். அது மட்டும் இல்லாமல், பிளிச்சி மற்றும் அருகில் உள்ள வெள்ளியங்காடு, தோலம்பாளையம், நெல்லித்துறை, கெம்மாரம்பாளையம் போன்ற பகுதிகளில் வாழும் மலை வாழ் மக்களுக்கு சீருடைகள் காலணிகள் போன்றவற்றை வருடா வருடம் வழங்கி வருகின்றனர்.

பத்தாம் வகுப்பு முடித்து, மேற்படிப்பு படிக்கின்ற மாணவர்களுக்கு ஒவ்வொருவருக்கும், 2000 ஊக்கத்தொகையும், உடைகளும் ஒவ்வொரு வருடமும் கொடுத்து வருகின்றனர். அதுமட்டுமின்றி, நமது சிக்காரம்பாளையம் ஊராட்சியிலேயே, சிக்காரம்பாளையம், கருப்பராயன் நகர், வடவள்ளி ஆகிய கிராமங்களில் மிகவும் சிதிலமடைதிருந்த டேப்பர் வீடுகளை, பார்த்த தலைவர், தனது சொந்த செலவில் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகளை, பழுது பார்த்து, ஒரே மாதிரியான வண்ணம் பூசி கொடுத்துள்ளார்.

அதை பார்த்தீர்கள் என்றால் ஒவ்வொரு வீடும் சுமார் 50,000 ரூபாய் மதிப்புக்கு மேல் வரும். அது மட்டுமின்றி, அரசு வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் வீடு கட்டும் அனைவருக்கும் ஒரு யூனிட் எம் சாண்ட் மற்றும் ஜல்லி இலவசமாக கொடுத்து வருகிறார். அது எந்த மக்கள் ஆனாலும் சரி. இது போன்ற உதவிகள் செய்வதனால், இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கி தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

16. **திரு. கே. முருகன், சிக்காரம்பாளையம்**

நான் சிக்காரம்பாளையம் கிராமத்தை சேர்ந்தவன். எனக்கு 66 வயதாகிறது. எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக இந்த சிக்காரம்பாளையம் கிராமத்தில் கல்குவாரிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த கல்குவாரி என்பது இயற்கையிலேயே அந்த சிக்காரம்பாளைய கிராமத்திற்கு வாய்த்த வரப்பிரசாதமாகும். கோலாரில் தங்கம் வெட்டி எடுப்பது போன்று, இந்த சிக்காரம் பாளையம் ஊராட்சியில் உற்பத்தியாக கூடிய இந்த கனிம வளத்தை கொண்டு இந்த ஊராட்சியின் வளர்ச்சி திட்டங்களுக்கும் உள்ளூரிலே இருக்கக்கூடிய பொதுமக்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைப்பதற்கும் ஏதுவாக இருக்கிறது. ஆகவே, இது போன்ற நமது கல்குவாரிகளுக்கு அனுமதி வழங்க உதவிடுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நன்றி வணக்கம்.

## 17.திரு. L. முருகையன், வடவள்ளி

சிக்காரம் பாளையம் ஊராட்சி என்பது நமது காரமடை ஒன்றியத்திலேயே மிகவும் வளர்ச்சியடைந்த கிராமமாகும். இக்கிராமத்தில் சாலைகள், பள்ளிகள் இது மாதிரியான பொது நலன்கள் எல்லாமே சிறப்பாக இருக்கின்றது. இவையெல்லாம், ஊராட்சி மன்ற தலைவருக்கு தான் பெருமை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால், இப்போது ஒன்னிப்பாளையம் பிரிவு நன்றாக வளர்ச்சியடைந்திருக்கிறது. அதில், ஏக்கருக்கு பல கோடி ரூபாய்க்கு சென்று கொண்டிருக்கிறது. ஒரு சென்டு ஐந்து லட்சத்திற்கு விற்பனையாகிறது. நான் வடவள்ளியில் வசிக்கிறேன். வடவள்ளி பெருமாள் கோயில் முதல் குமரன் குன்றுவரை ஒரு சிறு வழித்தடம் இருக்கிறது. இந்த சிக்காராம்பாளையம் கிராமத்தில் உடைக்கின்ற கல் அந்த சாலை வழியாகதான் செல்கிறது. அந்த சாலை முற்றிலுமாக சிதிலமடைந்து இருக்கிறது.

அவ்வழியாக ஒரு பத்து வீடுகளுக்கு பஞ்சாயத்து மூலமாக குழாய்கள் போடப்பட்டிருக்கின்றது. அந்த குழாய்கள் முழுவதுமாகவே பழுதாகி தண்ணீர் வருவதில்லை. இதை யாருமே கண்டுகொள்ளாது இருக்கிறார்கள். ஒரு தரைப்பாலம் இருக்கிறது. அதுவும் சிதிலமடைந்து மழை காலத்தில் ஒரு பத்து

பதினைந்து பேர் இருசக்கர வாகனத்தில் இன்றும் விழுந்து கொண்டுதான் இருக்கிறார்கள். இது ஒரு குற்றச்சாட்டு.

வடவள்ளியில் இருந்து காரமடைக்கு, கருப்பராயன் கோவில் வழியாக நேர்வழி அருகாமையில் இருக்கின்றது. அந்த ரோடு பயன்பாட்டில் இல்லாமல் இருக்கின்றது. சிக்காரம்பாளையம் மாகாளியம்மன் கோயில் போக்குவரத்து வசதி இல்லாமல் இருக்கின்றது. கல்குவாரிக்கு அருகாமையில் நிலங்கள் ஏக்கருக்கு 50 லட்சம் தான் போகிறது

அப்போது அந்த பகுதி மக்கள், ஒன்னிப்பாளையம் பிரிவில் உள்ள மக்கள், ஒரே கிராமத்தில் இரண்டு வகையாக பயன்பெறுகிறார்கள். ஆகவே, இந்த கல்குவாரிகளை சிக்காரம்பாளையம் கிராமத்தில் நடத்தாமல் வேறு கிராமத்தில் நடத்தலாம். அந்த பகுதி மக்களும் சற்று மேம்பாடு அடைவார்கள்.

ஆகவே, சிக்காரம்பாளையம் கிராமத்தில் கல்குவாரியை நிறுத்திவிட்டு வேறு தொழில் செய்து மக்களுக்கு பயன் கொடுக்கலாம் என்பதே என்னுடைய கருத்து.

## 18. திரு. கார்த்திக், வடவள்ளி

எனது பெயர் கார்த்திக். நான் பன்னிரண்டாம் வகுப்பு முடித்துவிட்டு, என்ன செய்வது என்று தெரியாமல் இருந்தேன். தலைவர் அவர்கள் என்னை கல்லூரி படிக்க வைத்தார். என்னால் 5 டிகிரி வரை படிக்கமுடிந்தது. இப்போது நான் கல்லூரியில் பேராசிரியராக பணி செய்து கொண்டிருக்கிறேன். இதற்கு நான் தலைவர் அவர்களிடம் முதற்கண் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த கல்குவாரியினால் கிடைக்கும் வருமானம் மூலமாக கிட்டத்தட்ட 50 குடும்பங்களுக்கு வாழ்வாதார மேம்படுகிறது. அது மட்டுமில்லாமல் காரமடை ஒன்றிய ஊராட்சிக்கு உட்பட்ட 25 அரசு பள்ளி மாணவ மாணவிகளுக்கு, 21 ஆண்டுகளாக இலவச விளையாட்டு சீருடைகள் தந்து அவர்களது கல்வியை மேம்படுத்துகிறார்கள். பள்ளிகளுக்கு மட்டுமல்லாது ஒவ்வொரு ஆண்டும் கல்லூரி படிக்கும் மாணவ மாணவியர்களுக்கு ஊக்கத்தொகை கொடுத்து, அவர்களது கல்வியை தரத்தை மேம்படுத்துகிறார்கள். இதனால், பல மாணவர்கள் கல்லூரி படிக்கும் வாய்ப்பை பெறுகிறார்கள்.

மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் நம் பஞ்சாயத்திற்கு உட்பட்ட எல்லா பகுதிகளிலும், குடிநீர் வசதி, தெருக்கள், தார் சாலைகள், வடிகால் வாரியம் போன்ற எல்லாவற்றையும் அமைத்து சிறப்பாக செய்து கொண்டிருக்கிறார்கள் அதனால், இக்கல்குவாரி வருவதால் எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்று இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி வணக்கம்.

## 19. திரு. ரங்கராஜ், கன்னார்பாளையம்

எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து கல்குவாரி இங்கே அமைந்திருக்கிறது. கல்குவாரி அமைந்திருக்கிறது என்று சொல்வதை விட நமது ஊராட்சியின் வளர்ச்சி பணிகளுக்கும் பொது மக்களுக்கும் நிறைய நன்மை செய்துகொண்டு வருகிறது. அதனால், இங்கே கல்குவாரி அமைவதால் எந்த வித ஆட்சேபனையும் இல்லை. கல்குவாரியை வைத்து என்னென்னமோ செய்கிறார்கள். முக்கியமாக இந்த ஊராட்சி வளர்ச்சிக்கும், சிக்காராம்பாளையம் பஞ்சாயத்து பொதுமக்களுக்கும், அனைவருக்கும் நன்மை செய்து வருகிறார்கள். சொன்னால், சொல்லிக் கொண்டே போகலாம். அதனால், இந்த கல்குவாரிக்கு உரிமம் வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்

## 20. திரு. ஜனார்த்தனன், சிக்காரம்பாளையம், 6-வது வார்டு கவுன்சிலர்

பெரியோர்களை தாய்மார்களே அனைவருக்கும் வணக்கம். நான் கட்டிடத் தொழிலாளி. கட்டிடத் தொழிலாளியான எனக்கு ஜல்லி, மணல், எம்-சாண்ட், பி-சாண்ட் எல்லாமே தேவைப்படுகிறது. இங்கே கல்குவாரி வேண்டாம் என்று சொன்னால், நாங்கள் எங்கே செல்வது? இதே பஞ்சாயத்தில் கட்டிடத் தொழிலாளிகள் கிட்டத்தட்ட 10,000 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இங்கு வசிக்கும் கட்டிட தொழிலாளிகளான 10,000 குடும்பங்களுக்கு வேலை எங்கே செல்வது? எம் சாண்டிற்கு எங்கே செல்வது? பி-சாண்டிற்கு எங்கே செல்வது? விலை அதிகமோ கம்மியோ! இது அருகாமையில் இருக்கின்றது. இதற்காக நான் கள்ளிப்பட்டி சென்று எடுக்க முடியுமா? அதனால், கல்குவாரி சிக்காரம்பாளையம் பஞ்சாயத்திலேயே இருக்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

21. **திரு சரவணகுமார் பெரிய வடவள்ளி.**

தி/ள். ஸ்ரீ புளூ மெட்டல்ஸ் வருவதற்கு முன்பே, பல கல்குவாரிகளுக்கு அரசாங்கம் அனுமதி கொடுத்திருக்கிறது. அதிலே, பல முறைகேடுகள் செய்திருக்கிறார்கள். அரசுக்கு கொடுத்த உறுதிமொழி பட்டியலின்படி, அதே ஆழத்தில் கனிம வளங்களை வெட்டி எடுத்து இருக்கிறார்கள் என்றால், நிச்சயம் இல்லவே இல்லை. பசுமை அரண்கள் அமைத்திருக்கிறார்கள் என்றால், நிச்சயம் இல்லவே இல்லை. கம்பி வேலிகள் அமைத்திருக்கிறார்கள் என்றால், நிச்சயம் இல்லவே இல்லை.

இதனால் சிக்காரம்பாளையம் பஞ்சாயத்தினுடைய வாழ்வாதாரம் மிகவும் பாதிப்படைந்திருக்கிறது. அது மட்டுமில்லாமல், விவசாயிகளுடைய வாழ்வாதாரமும் நிலத்தடி நீரின் மட்டமும் மிக மிக பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கிறது. இப்பொழுது, ஸ்ரீ புளூ மெட்டல்ஸ் நிறுவனத்திற்கு அளித்துள்ள குத்தகையிலிருந்து எந்த அளவிற்கு வெட்டி எடுத்து இருக்கிறார்கள்? கனிம வளங்கள் எவ்வளவு கொள்ளை போயிருக்கிறது? என்று முதலில் ஆய்வு செய்து, அதற்கான வருவாய் இழப்பு ஏற்படுத்தி இருக்கிறதா என்பதை பரிசீலனை செய்து, அதற்கு தண்டனையும் அவர்களுக்கு கொடுக்க வேண்டும். அதற்கு துணை போன அதிகாரிகளின் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அது மட்டும் இல்லாமல், இனிமேல் சிக்காரம்பாளையம் பஞ்சாயத்தில் எந்தவித கல் குவாரிகளுக்கும் அனுமதி வழங்கக் கூடாது என்பதை அழுத்த திருத்தமாக கூறிக்கொள்கிறேன்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:**

அனைவருக்கும் நன்றி வணக்கம். மனு கொடுப்பவர் யாராக இருந்தாலும், இப்போது கொடுக்கலாம். அவை கூட்ட நடவடிக்கைகளுடன் ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும். இந்த பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டத்தில் தங்கள் கருத்துக்களை பதிவு செய்த, சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கும், பொது மக்களுக்கும் மற்றும் இந்த கூட்டத்தை சிறப்பாக நடத்த உதவிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், காவல் துறை நண்பர்களுக்கும், கூட்டத்தில் பங்கேற்ற அலுவலர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் மாசு கட்டுப்பாட்டு வாரிய

Sri
25

அதிகாரிகள் அனைவருக்கும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பிலும் மாசு கட்டுப்பட்டு வாரியம் சார்பிலும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி வணக்கம் !

**இணைப்பு :**

மனுக்களின் எண்ணிக்கை – 45 எண்ணிக்கை.

மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் (மு.கூ/பொ)
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
கோயமுத்தூர் வடக்கு

4/9/24
மாவட்ட வருவாய் அலுவலர்/
முத்திரைகள்
கோயமுத்தூர்